# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-


THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 JULY

மலர்: 10 இதழ் : 10 ஜுலை 2017 விலை: ரூ. 5






## ஈயும் சிலந்தியும் அற்பமானவையா?



- எவர்கள் இறைவனை விட்டுவிட்டு மற்ற பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டார்களோ அவர்களின் உவமை தனக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொள்ளும் சிலந்திப்பூச்சியாகும். திண்ணமாக, வீடுகளிலேயே மிகவும் பலவீனமானது சிலந்திப்பூச்சியின் வீடாகும். அந்தோ! இவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே! (திருக்குர்ஆன் 29:41)

# ரமலான்
# கண்கொள்ளாக் காட்சிகள்

● உலகெங்கும் உள்ள பள்ளிவாசல்களில் ஐவேளைத் தொழுகை நேரங்களில் இறை விசுவாசிகள் இன, நிற, மொழி மற்றும் பொருளாதார ஏற்ற தாழ்வுகள் மறந்து தொழுகைக்காக வரிசைகளில் அணிவகுப்பதும...

● கடுங்குளிரிலும் அதிகாலை வேளைக்கு முன்னதாகவே எழுந்து உணவருந்திவிட்டு சூரியன் உதிக்கும் முன்னரே அதேபோல் தொழுகைகளில் அணிவகுப்பதும்...

● மாலை சூரியன் அஸ்தமிக்கும் முன்னரே பள்ளிவாசல்களில் ஒன்று கூடி அவரவர் கொண்டுவந்த உணவுப்பொருட்களையும் பழங்களையும் ஓரிடத்தில் குவித்து, பள்ளி வாசல்களில் காய்ச்சப்படும் நோன்புக்கஞ்சியுடன் சேர்த்துப் பரிமாறப்பட நீண்ட சமபந்திகளில் அமர்ந்து சக விசுவாசிகளோடு பகிர்ந்துண்பதற்காக காத்திருப்பதும்..

● சூரியன் மறைந்த உடன் இறைவனை நினைவு கூர்ந்து பிரார்த்தனைகள் கூறப்பட ஒரே நேரத்தில் சகவிசுவாசிகளோடு பேரீத்தம்பழம் கொண்டு நோன்பைத் திறப்பதும்..



● உணவுண்ட பின் மீண்டும் மாலைத் தொழுகைக்காக அணிவகுப்பதும் அதைத் தொடர்ந்து இரவுத் தொழுகைக்காக அணிவகுப்பதும்....

ரமலான் மாதத்தின் கண்கொள்ளாக் காட்சிகள்! மனிதகுலம் சகோதர பாசத்தோடு ஒன்றிணைந்து தங்கள் வேற்றுமைகள் மறந்து தீண்டாமை மறந்து தோளோடுதோள் சேர்ந்து நின்று தொழும் காட்சியும் ஒரே தட்டில் பகிர்ந்துண்ணும் காட்சியும் அதைக் காண்பவர்களுக்கே குதுகலம் அளிக்கும் ஒன்று என்றால் அதை அனுபவிக்கும் அங்கத்தினர்களின் உள்ளங்களில் எழும் மகிழ்ச்சியை எழுத்தில் எவ்வாறு வடிக்க இயலும்?

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 JULY**

**மலர்: 10 இதழ் : 10 ஜூலை 2017 விலை: ரூ. 5**

**பொருளடக்கம்**

*சமூகத்தில் குழப்பங்களுக்கு வித்திடும் பெரும்பாவம் -2*
*பலவீனமான தங்குமிடம் -4*
*வணக்கசாலிக்கு நரகமா? -5*
*அற்ப ஜீவிகளும் அற்புதப் படைப்பும் -6*
*மனித மாமிசம் இலவசமா? -9*
*மக்கள் சேவை என்ற இறைவழிபாடு -11*
*இவற்றுக்கும் ரமலானுக்கும் என்ன தொடர்பு? -12*
*உறங்க முடியா இரவுகளில் ஒன்று! -14*
*துறவறம் இறைவனுக்கு ஏற்புடையதல்ல! -16*
*அவர்தான் அண்ணல் நபிகளார்! -17*
*உழைப்பதின் சிறப்பும் உழைப்போர் குணமும் -19*
*மனிதனை நினைக்க கடவுளை மறக்கவேண்டுமா? -21*

---

● **தமது செல்வங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவிடுவோருக்கு உதாரணம் ஒரு தானியம். அது ஏழு கதிர்களை முளைக்கச் செய்கிறது. ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் உள்ளன. தான் நாடியோருக்கு அல்லாஹ் இன்னும் பன் மடங்காகக் கொடுக்கிறான். அல்லாஹ் தாராளமானவன் அறிந்தவன். (திருக்குர்ஆன் 2:261)**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# சமூகத்தில் குழப்பங்களுக்கு வித்திடும் பெரும்பாவம்

'லா இலாஹ இல்லால்லாஹ்' என்பது இஸ்லாத்தின் மூலமந்திரம் ஆகும். வணக்கத்திற்கு உரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது இதன் பொருளாகும். இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் அந்த ஏக இறைவனையே அரபு மொழியில் 'அல்லாஹ்' என்று அழைக்கிறோம். சர்வவல்லமை கொண்டவனும் நுண்ணறிவாளனும் ஆன அந்த ஏக இறைவனை விட்டுவிட்டு அவனது அற்பமான படைப்பினங்களையும் கற்பனை உருவங்களையும் அவனுக்கு ஒப்பாக்கி வழிபடும் செயல் "இணைவைத்தல்" என்று வழங்கப்படுகிறது.

## இணைவைத்தல் உண்டாக்கும் குழப்பங்கள்

இந்த இணைவைக்கும் செயல் மனித சமூகத்தில் பல குழப்பங்களுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் மோசடிகளுக்கும் வித்திடுகிறது. இணைவைத்தலானது உண்மை இறைவனைப்பற்றிய மதிப்புணர்வையும் இறையச்சத்தையும் மனித மனங்களில் இருந்து போக்கிவிடுவதால் சமூகத்தில் பாவங்கள் மலிகின்றன. ஏக இறைவனை விடுத்து ஆளுக்கொரு கடவுள் நாட்டுக்கொரு கடவுள் என்று மக்கள் வணங்கத் தலைப்படும்போது மனிதகுலமும் அதற்கேற்ப பிளவுபடுகிறது. ஜாதிகளும் பிரிவினைகளும் பிறப்பால் ஏற்றத்தாழ்வுகள் கற்பித்தலும் நிகழ்கின்றன.

படைத்தவனை நேரடியாக வணங்குதல் எளிதானது, பொருட்செலவு இல்லாதது. ஆனால் இறைவன் அல்லாதவற்றை வணங்க மக்கள் தலைப்படும்போது அங்கு இடைத்தரகர்கள் புகுந்து மூடநம்பிக்கைகளை புகுத்துகிறார்கள். கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்டிப் பிழைக்க அங்கு ஏராளமான வாய்ப்புகளும் உருவாகின்றன.

எனவே அவ்வப்போது பூமிக்கு வந்த இறைத்தூதர்கள் அனைவரும் இறைவன் ஒருவனே என்பதை போதித்ததோடு இந்த இணைவைக்கும் செயலைக் குறித்து தத்தமது மக்களை எச்சரித்தார்கள். இணைவைக்கும் செயல் பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் என்றும் இறைவனால் மன்னிக்கப் படாத ஒன்று என்பதையும் எடுத்துரைத்து அவர்களை படைத்தவன்பால் திரும்புமாறு அழைத்தார்கள்.

இறுதிவேதம் திருக்குர்ஆன் கீழ்கண்டவாறு இப்பாவத்தைக் கண்டிக்கிறது:

## பாவங்களிலேயே மிகப்பெரும் பாவம்

● **"…..நிச்சயமாக இறைவனுக்கு இணைவைத்தல் மாபெரும் பாவமாகும்...... (திருக்குர்ஆன் 31:13)**

● **நிச்சயமாக இறைவன் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் இறைவனுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். (திருக்குர்ஆன் 4:48)**

## இது மிகப்பெரிய நன்றி கேடாகும்.

● **மனிதர்களே! உங்கள் மீது அல்லாஹ் வழங்கியுள்ள பாக்கியங்களைச் சிந்தித்துப் பாருங்கள் வானத்திலும், பூமியிலுமிருந்து உங்களுக்கு உணவளிப்பவன், அல்லாஹ்வை அன்றி (வேறு) படைப்பாளன்**

இருக்கின்றானா? அவனையன்றி வேறு நாயன் இல்லை. அவ்வாறிருக்க, (இவ்வுண்மையை விட்டும்) நீங்கள் எவ்வாறு திருப்பப்படுகிறீர்கள்? .(திருக்குர்ஆன் 35:3)

● அல்லாஹ்தான் உங்களைப் படைத்தான் பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான் அவனே பின்னர் உங்களை மரிக்கச் செய்கிறான். பிறகு அவனே உங்களை உயிர்ப்பிப்பான் -இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யக் கூடியதாக உங்கள் இணை தெய்வங்கள் இருக்கிறதா? அல்லாஹ் மிகவும் தூயவன் அவர்கள் இணை வைப்பதை விட்டும் மிகவும் உயர்ந்தவன்.

(திருக்குர்ஆன் 30:40)

### இணை வைப்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை!

●"நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதையாவது அவை படைத்துள்ளனவா அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா? என்பதை எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு, முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களின்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்!" என்று (நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் : 46:4)

### இடைத் தரகர்களுக்கு இடமில்லை

● தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (இணைவைப்பாளர்கள் ) வணங்குகிறார்கள் இன்னும் அவர்கள் "இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை" என்றும் கூறுகிறார்கள் அதற்கு நீர் "வானங்களிலோ பூமியிலோ அல்லாஹ் அறியாதவை (இருக்கின்றன என எண்ணிக் கொண்டு) நீங்கள் அவனுக்கு அறிவிக்கின்றீர்களா? அவன் மிகவும் பரிசுத்தமானவன். அவர்கள் இணைவைப்பவற்றை விட மிகவும் உயர்ந்தவன்" என்று கூறும். (திருக்குர்ஆன் 10:18)

### இணைவைப்போருக்கு தண்டனை நிரந்தர நரகம்

● அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. (திருக்குர்ஆன் 5:72)

● *நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :*

*யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம்புகுவார்.*

*அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி)*

# வாசகர் எண்ணம்

*இதழ் மிகவும் சிறப்பாக உள்ளது. வாசித்து முடித்ததும் அடுத்த இதழ் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை உண்டாக்குகிறது. ஆனால் இரண்டு மாதமாக இதழ் வராமல் போனதில் வருந்துகிறேன்.*

**— எ. பாபு, குன்னூர்,**

# பலவீனமான தங்குமிடம்

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் அவனது இறுதித்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு அருளிய வேதவசனங்களின் தொகுப்பே திருக்குர்ஆன். அந்த வேதத்தில் இறைவன் அல்லாதவற்றை வணங்கும் மக்களின் அறியாமை குறித்து குறிப்பிடும்போது சிலந்தியை தொடர்பு படுத்தி பின்வருமாறு கூறுகிறான்:

- **எவர்கள் இறைவனை விட்டுவிட்டு மற்ற பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டார்களோ அவர்களின் உவமை தனக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொள்ளும் சிலந்திப்பூச்சியாகும். திண்ணமாக, வீடுகளிலேயே மிகவும் பலவீனமானது சிலந்திப்பூச்சியின் வீடாகும். அந்தோ! இவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே! (திருக்குர்ஆன் 29:41)**



சிலந்தி தன் வலையில் சிக்கும் சிறு புழு பூச்சிகளை அதைக் கொண்டே கட்டிவைத்து அவற்றைக் கொல்கிறது. அதுவே அதன் நீண்டநாள் உணவாக சேமிக்கப்படுகிறது. சிலந்தி தான் விரும்பியபோது உணவுண்டு பசியாறவும் செய்கிறது. சிலந்தியைப் பொறுத்தவரையில் தான் பின்னிய வலைவீடு சக்திவாய்ந்த ஒன்றாக இருந்தாலும் அது எவ்வளவு நிலையற்ற பலவீனமான ஒன்று என்பதை நாமறிவோம். நம் கைவிரல் கொண்டோ சற்று பலமாக காற்றை ஊதவதைக் கொண்டோ எளிதில் சிலந்தியின் 'கோட்டையைக்' கலைத்து விடலாம். அவ்வாறு கலைக்கப்படும்போது அதன் சேமிப்பும் காணாமல் போய்விடுகிறது. தங்குமிடம் இல்லாமல் தவிக்கும் நிலையும் உண்டாகிறது. ஆபத்தில் சிலந்தி அழிந்துபோகவும் வாய்ப்புண்டாகிறது.

படைத்த இறைவனை விடுத்து அவனது படைப்பினங்களையும் மனிதர்களையும் இன்ன பிற பொருட்களையும் அவற்றுக்கு தெய்வ சக்தி உண்டு என்றும் அவை மனிதன் சந்திக்கக்கூடிய ஆபத்துகளில் இருந்து தங்களைக் காப்பாற்றும் என்று நம்பி அவற்றை வணங்கவும் காணிக்கைகள் செலுத்தவும் செய்யும் மனிதர்களின் நிலையும் அதுவே என்று இறைவன் மேற்படி வசனம் மூலம் தெரிவிக்கிறான்.

உண்மையில் படைத்த இறைவனை வணங்கி அவனது எவல்-விலக்கல்களை பேணி வாழும் நன்மக்களுக்கு இவ்வுலகில் அமைதியும் இறைவனின் பாதுகாப்பும் கிடைக்கிறது. அவர்கள் செய்யும் நல்லறங்கள் ஒவ்வொன்றும் அழியாத செல்வங்களாக இறைவன்பால் சேமிக்கப்படுகின்றன. இறுதியில் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு மறுமை வாழ்க்கைக்கு செல்லும்போது அந்த சேமிப்புகள் புண்ணியங்களாக வருகின்றன. அதன் பலனாக மறுமையில் முடிவுறாத இன்பங்கள் நிறைந்த நிரந்தரமான வாழ்விடமும் - அதாவது சொர்க்கமும் - கிடைக்கிறது.

அதேவேளையில் இறைவன் அல்லாதவற்றை வணங்கி அவை தம்மைப் பாதுகாக்கும் என்று நம்பி வாழ்வோரின் கட்டமைப்பு தற்காலிக இன்பங்களை மட்டுமே தரும். அது மேற்படி இறைவசனம் கூறும் சிலந்தியின் வீட்டைப்போல மிக எளிதில் அழியக்கூடியதாகும். தவறான இறைநம்பிக்கை கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் செய்த நல்லறங்கள் சிலந்தி வீட்டில் சேமிப்பைப் போல காணாமல் போய்விடுகின்றன. படைத்த இறைவனுக்கு செலுத்த வேண்டிய வணக்கத்தை நன்றியை அவன் அல்லாதவற்றுக்கு செலுத்தியதான் இறைவனின் கோபத்திற்கும் தண்டனைக்கும் அவர்கள் ஆளாகிறார்கள். அவர்கள் நிரந்தர வேதனைகள் கொண்ட நரகத்திலும் நுழைகிறார்கள்.

● **இந்த உவமைகளை மக்களுக்காகக் கூறுகிறோம். அறிவுடையோரையன்றி வேறு எவரும் இதனை புரிந்து கொள்ள மாட்டார்கள். (திருக்குர்ஆன் 29:43)**

# வணக்கசாலிக்கு நரகமா?

இறைவனின் எவல்விலக்கல்களை ஏற்று அதன்படி வாழ்வதே இஸ்லாம் எனப்படும். அவன் ஏவியவற்றை செய்தால் அவை புண்ணியங்களாகப் கணக்கிடப்படுகின்றன. இறைவன் தடுத்த செயல்களைச் செய்தால் அவை பாவங்களாகப் பதிவாகின்றன. மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று பாவபுண்ணியங்கள் கணக்கிடப்பட்டு புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் விதிக்கப்பட உள்ளன.

அந்த வகையில் வாழ்நாள் முழுக்க தொழுகையில் ஈடுபட்டிருந்தாலும் தானதர்மங்களை தாராளமாகச் செய்திருந்தாலும் விரதங்கள் பேணியிருந்தாலும் சகமனிதனுக்கு அநியாயம் செய்திருந்தால் அனைத்து புண்ணியங்களையும் இழக்க நேரிடும்.

● ஒரு முறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்களிடம், “இல்லாதவர் என்றால் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டார்கள். மக்கள், “யாரிடம் காசோ, பொருட்களோ இல்லையோ அவர்தான் எங்களைப் பொறுத்தவரை இல்லாதவர்” என்று பதிலளித்தார்கள்.

உடனே நபி(ஸல்) அவர்கள், “என் சமுதாயத்தாரில் ஒருவர் மறுமைநாளில் தொழுகை, நோன்பு, ஸகாத் ஆகியவைகள் செய்த நன்மையுடன் வருவார். (அதே நேரத்தில்) அவர் ஒருவரைத் திட்டியிருப்பார். ஒருவர் மீது அவதூறு சொல்லியிருப்பார். ஒருவரது பொருளை (முறைகேடாகப்) புசித்திருப்பார். ஒருவரது இரத்தத்தைச் சிந்தியிருப்பார். ஒருவரை அடித்திருப்பார். ஆகவே , அவருடைய நன்மைகளிலிருந்து அவரால் பாதிக்கப்பட்டவருக்குக் கொடுக்கப்படும் அவருடைய நன்மைகளிலிருந்து எடுத்துக்கொடுப்பதற்குமுன் நன்மைகள் தீர்ந்து விட்டால், (அவரால் பாதிக்கப்பட்ட) மக்களின் பாவங்களிலிருந்து சில எடுக்கப்பட்டு , இவர் கணக்கில் சேர்க்கப்படும். பிறகு அவர் நரக நெருப்பில் தூக்கியெறியப்படுவார். அவரே இல்லாதவர்” என்று கூறினார்கள்.


*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) (நபிமொழி நூல்: முஸ்லிம் 5037)*

# அற்ப ஜீவிகளும் அற்புதப் படைப்பும்


தனது நாற்பதாவது வயதில் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இறைத்தூதராக நியமனம் செய்யப்பட்டபோது மக்காவில் சிலைவழிபாட்டுக்கும் மூட பழக்கவழக்கங்களுக்கும் பஞ்சமில்லாமல் இருந்தது. குலத்துக்கு ஒன்று குடும்பத்துக்கு ஒன்று என்ற கணக்கில் கஅபா ஆலயத்தில் 360 சிலைகள் நிறுவப்பட்டு நாளுக்கு ஒன்று என்ற வகையில் வழிபாடு நடந்து வந்தது. சுமார் 5000 வருடங்களுக்கு முன்னர் ஏக இறைவனை வழிபடுவதற்காக இப்ராஹீம் (ஆபிரஹாம்) என்ற இறைத்தூதரால் கட்டப்பட்ட ஆலயம்தான் கஅபா என்ற அந்த தூய்மையான இறை வீடு!

நபிகளார் இறைவன் வழங்கும் வாழ்வியல் கொள்கையான இஸ்லாத்தை மக்காவில் மக்களிடையே அறிமுகப்படுத்தி அவர்களை ஏக இறை வழிபாட்டுக்கு அழைத்தார். அதுவே இவ்வுலக வாழ்க்கையில் அமைதி தருவது, மறுமையில் சொர்க்கத்தைப் பெற்றுத் தருவது என்று எடுத்துரைத்தார். மூதாதையர்களின் வழக்கம் என்ற பெயரில் இறைவன் அல்லாதவற்றை கடவுளாக பாவித்து வணங்கும் செயல் இம்மை வாழ்வில் குழப்பங்களுக்கு இட்டுச்செல்வது என்றும் மறுமையில் இறைவனின் கோபத்தையும் தண்டனையையும் பெற்றுத்தருவது என்று கூறினார். ஆயினும் மூதாதையர் வழிமுறைகளில் முழுமையாக மூழ்கிப் போயிருந்த அம்மக்கள் நபிகளாரை ஏற்காமால் மூர்க்கமாக எதிர்க்கவும் எள்ளிநகையாடவும் செய்தார்கள். இறைவனிடமிருந்து தனக்கு அருளப்படும் திருக்குர்ஆன் வசனங்களை மக்களிடையே அவ்வப்போது ஓதிக் காண்பித்தார் நபிகளார்.

சிலை வழிபாட்டிலும் முன்னோர்களின் மூடப்பழக்கவழக்கங்களிலும் மூழ்கிக்கிடந்த மக்கா நகர மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வண்ணம் இறைவன் திருக்குர்ஆன் வசனங்களை இறக்கியருளினான். உதாரணமாக கீழ்கண்ட வசனங்களைப் பாருங்கள்:




● **எவர்கள் இறைவனை விட்டுவிட்டு மற்ற பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டார்களோ அவர்களின் உவமை தனக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொள்ளும் சிலந்திப்பூச்சியாகும். திண்ணமாக, வீடுகளிலேயே மிகவும் பலவீனமானது சிலந்திப்பூச்சியின் வீடாகும். அந்தோ! இவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே! (திருக்குர்ஆன் 29:41)**



● **மனிதர்களே! (உங்களுக்கோர்) உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வை யன்றி (வேறு) எவர்களை நீங்கள் (அழைத்துப்) பிரார்த்திக்கிறீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும், ஒரு ஈயைக் கூட படைக்க முடியாது. மேலும் அவர்களிடமிருந்து (அது) ஒரு பொருளை எடுத்துச் சென்றால் அவர்களால் அந்த ஈயிடமிருந்து அதனைக் கைப்பற்றவும் முடியாது.**

**தேடுவோனும் தேடப்படுபடுவோனும் பலவீனர்களே! (திருக்குர்ஆன் 27:73)**

கொசு, ஈ, சிலந்தி, எறும்பு, போன்றவையும் அதைவிட சிறிய உயிரினங்களும் இறைவனின் நுண்ணறிவுக்கும் அதிபக்குவமான படைப்பாற்றலுக்கும் சான்றுகளாக விளங்குபவை என்பதை அறிவியல் வளர்வளர தெளிவாக நாம் அறிந்துவருகிறோம்.. அளவில் அற்பமானவையாக இருந்தாலும் இந்த ஜீவிகளின் உடலமைப்பிலும் அவற்றின் ஆற்றல்களிலும் இயக்கங்களிலும் வாழ்க்கை ரீதிகளிலும் அடங்கிக்கிடக்கும் அற்புதங்கள் அளவிடமுடியாதவை.

ஆனால் அறியாமையில் மூழ்கிக்கிடந்த மக்காவாசிகள் இது போன்ற வசனங்களைக் கேட்டதும் அவற்றின் உண்மைப்பொருள் புரியாமல் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். 'முஹம்மதின் இறைவன் ஈயையும், சிலந்திப்பூச்சியையும் மேற்கோள் காட்ட வெட்கப்படவில்லையா? என்று இழித்துரைத்தார்கள். அதற்கு பதில் கொடுக்கும் வண்ணம் இறைவன் பின்வரும் வசனத்தை அருளினான்:

- **நிச்சயமாக அல்லாஹ் கொசுவையோ, அதிலும் (அற்பத்தில்) மேற்பட்டதையோ உதாரணம் கூறுவதில் வெட்கப்படமாட்டான். (இறை) நம்பிக்கைக் கொண்டவர்கள் நிச்சயமாக அ(வ்வுதாரணமான)து தங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையென்பதை அறிவார்கள்.ஆனால் (இறை நம்பிக்கையற்ற) நிராகரிப்பாளர்களோ, "இவ்வித உதாரணத்தின் மூலம் இறைவன் என்ன நாடுகிறான்?" என்று (ஏளனமாகக்) கூறுகிறார்கள். அவன் இதைக்கொண்டு பலரை வழிகேட்டில் விடுகிறான் இன்னும் பலரை இதன்மூலம் நல்வழிப் படுத்துகிறான் ஆனால் தீயவர்களைத் தவிர (வேறு யாரையும்) அவன் அதனால் வழிகேட்டில் ஆக்குவதில்லை. (திருக்குர்ஆன் 2:26)**

## சிலந்தி வலையில் பொறியியல் கலை


சிலந்திகள், தமது வலைகளை பின்னுவதற்குரிய நூலை தாங்களே உருவாக்குகின்றன. அவை பின்னுவதற்குப் பயன்படுத்தும் தொழில் நுட்பமும், இன்றைய கட்டிடக்கலை பொறியாளர்கள் பயன்படுத்தும் தொழில் நுட்பமும் ஒன்றுதான் என்பதை நம்மில் பலரும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிலந்தி தனது வலையைப் பின்னுவதற்கு இரண்டு எதிரெதிர் முனைகள் தேவைப்படுகின்றன. பொதுவாக இரண்டு சுவர்கள் சந்திக்கும் மூலையிலோ, இரண்டு மரக்கிளைகளுக்கு இடையிலோ, சிலந்தி தனது வலையை உருவாக்குகிறது. இருப்பினும், சிலவகை சிலந்திகள் ஒரு தனிப்பட்ட மரக்கிளையை மட்டுமே பயன்படுத்தி தங்களின் வலைகளை பின்னும் திறன் படைத்தவை.

## நேர்த்தியான வலைகள்

இவை இத்தனை நேர்த்தியான வலைகளை உருவாக்குகின்றன என்பது வரைபடங்களை வைத்து உருவாக்கும் பொறியாளர்களைக் கூட வியப்படையச் செய்கின்றன. சிலந்தி முதலில் எளிதில் வளையக்கூடிய ஒரு மரக்கிளையைத் தேர்ந்தெடுத்து மரக்கிளையின் முனையில் தனது உடலிலிருந்து உற்பத்திச் செய்யும் நூலின் ஒரு முனையை கெட்டியாகக் கட்டுகிறது. தொடர்ந்து மரக்கிளையின் அடிப்பகுதி நோக்கி ஊர்ந்து செல்கிறது. ஒரு குறிப்பிட்ட தூரம் வந்ததும் தனது உடலிலிருந்து உற்பத்தியாகும் நூலை நிறுத்துகிறது. மரக்கிளையில் கட்டியிருக்கும்

நூலை, மரக்கிளை வளையும் வரை இழுத்து அரை வட்டவடிவத்திற்கு கொண்டு வருகிறது. நூலின் மறு முனையை வளைய வடிவத்திற்குக் கட்டுகிறது. உருவாக்கப்பட்ட இந்த வளையத்திற்குள் சிலந்தி தனது வலையை பின்ன ஆரம்பிக்கிறது. இரண்டு மீட்டர் நீளமுள்ள நூலை இரண்டு மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ள இரண்டு சுவர்களுக்கு மத்தியில் கட்ட வேண்டும் எனில் அது எவ்வாறு மிக நேர்த்தியாக கட்டிமுடிக்க முடியும் என்பதை கட்டிடக் கலைஞர்கள் புரிந்து கொள்வார்கள்.

சிலந்தியின் தொழில் நுட்பம் சில வேளைகளில் அதிக இடைவெளிகளில் பின்னும் வலை வலுவில்லாது போய்விடும். அப்போது தாம் உணவாக உட்கொள்ளும் பூச்சிகளைப் பிடிப்பதற்காக வலை வலுவானதாக இருப்பதற்கு அது ஒரு அதிசயமான முடிவுக்கு வருகிறது. உடனே தனது உடலிலிருந்து உற்பத்திச் செய்யும் நூலின் ஒரு முனையை பின்னப்பட்ட வலையின் மத்தியில் கட்டுகிறது. மற்றொரு முனையை தரையில் உள்ள ஒரு சிறிய கல்லில் கட்டிவைக்கிறது. மீண்டும் வலைக்கு வரும் சிலந்தி, வலையின் மத்தியில் கட்டியிருக்கும் நூலை இழுத்து தரையில் உள்ள கல்லை மேல் நோக்கி உயர்துத்துகிறது. மேல் நோக்கி உயர்த்தப்பட்ட கல் வலையின் மத்தியில் தொங்கிக் கொண்டிருக்கும் வகையில் நூலை உயர்த்தி, வலையின் மற்றொரு பகுதியில் இழுக்கப்பட்ட நூலை கட்டிவைக்கிறது. தொங்கிக் கொண்டிருக்கும் கல்லின் கனத்தால், சிலந்தி வலை கீழ் நோக்கி இழுபடுவதோடு வலையின் வலிமையும், இறுகும் தன்மையும், தேவையான அளவு அதிகரிக்கிறது. சிலந்தியின் இந்தப் பிரச்சனைக்கு ஒரு பொறியாளர் கூட இதனைச் சிந்தித்திருக்கமாட்டார்.



சில வகை சிலந்திகள் தங்களின் வலைகளில் அறியாமல் பிற பூச்சியினங்கள் நுழைந்து விட்டால் அவற்றை தனியாக ஒரு பகுதியில் எங்கும் 'நகரவிடாமல் சிறைப்படுத்தி விடுகின்றன. இந்த நுண்ணறிவு அவற்றிற்கு எப்படிக் கிடைத்தன? கட்டடக்கலை அறிவு இல்லாத இந்தச் சிலந்திகள் எவ்வாறு இந்த அறிவைப் பெற்றன? ஐந்தறிவு படைத்த இந்த சிலந்திகள் எப்படி இந்த தொழில் நுட்பத்தைப் கற்றன? இவ்வுலகில் வாழும் சிலந்திகள் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த தொழில் நுட்பத்தைப் பயன்னடுத்துகின்றனவே ? இது இறைவனால் வழங்கப்பட்ட அற்புத ஆற்றலல்லவா? ஆம்! இறைவன் கூறுவது போல சிந்திக்கும் மக்களுக்கு இதில் சிறந்த படிப்பினைகள் உள்ளன.

● **வானங்கள், பூமி, இவற்றின் ஆட்சியையும் அல்லாஹ் படைத்திருக்கும் மற்றப் பொருள்களையும் அவர்கள் நோட்டமிடவில்லையா? அவர்களுடைய தவணை நெருங்கியிருக்கக்கூடும் என்பதையும் (அவர்கள் சிந்திக்க வில்லையா?) இதற்குப் பின்னர் எந்த விஷயத்தைத்தான் அவர்கள் நம்பிக்கை கொள்ளப்போகிறார்கள்? (திருக்குர்ஆன் 7:185)**

# மனித மாமிசம் இலவசமா?

குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பல குழப்பங்களுக்கு வித்திடும் பாவங்களில் ஒன்று புறம் பேசுதல். இதுபோன்ற மனித மனம்சார்ந்த பாவங்களைத் தடுக்கவோ சமூகத்தில் பரவாமல் தடுக்கவோ என்ன செய்யலாம் என்று கேட்டால் நாத்திகர்களிடம் இதற்கு பதில் கிடைக்காது. காரணம் அவர்களுக்கு இறைநம்பிக்கையும் கிடையாது. மரணத்திற்குப்பின் நம் வினைகளுக்கு விசாரணை உண்டு என்ற நம்பிக்கையும் கிடையாது. இந்த அப்பட்டமான உண்மைகளை மறுப்பதனால் சமூக சீர்திருத்தம் என்பதை அவர்களால் வாயளவில் பேசத்தான் முடியுமே தவிர நடைமுறை சாத்தியமான எந்த தீர்வுகளையும் அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கவும் முடியாது. மேலும் இதுபோன்ற பாவங்களை சட்டம்போட்டும் தடுத்துவிட முடியாது. இதுபோன்ற பாவங்களை மனிதமனங்களை சீர்திருத்துவதன் மூலம் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். திருக்குர்ஆனும் நபிமொழிகளும் பகுத்தறிவு பூர்வமான இறைநம்பிக்கையையும் மறுமை நம்பிக்கையையும் கற்பிப்பதால் இறையச்சம் என்ற பொறுப்புணர்வை மனித மனங்களில் விதைக்கின்றன. இறைவன் தன்னைக் கண்காணிக்கிறான் என்ற உணர்வு விதைக்கப்படுவதால் யாரும் காணாதபோதும் பாவங்களில் ஈடுபடுவதில் இருந்து அவை மனிதனைத் தடுக்கின்றன.

புறம் பேசுவதனால் ஏற்படும் தீமைகள் குறித்து இறைவனும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் மிகக் கடுமையாக எச்சரித்துள்ளனர். மரணித்த பிறகு சமாதியிலும், மறுமையிலும் மிகக் கொடிய தண்டனைகளைப் பெற்றுத் தரும் மிக மிக தீய செயலான புறம் பேசுவதை விட்டும் நாம் அவசியம் கைவிட வேண்டும்.

## புறம் பேசுதல் என்றால் என்ன?

● "புறம் என்றால் என்னவென நீங்கள் அறிவீர்களா?" என நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது, "அல்லாஹ்வும் அவனது தூதரும் நன்கறிவர்" என நபித்தோழர்கள் கூறினர். அப்போது நபி (ஸல்) அவர்கள், "உன்னுடைய சகோதரன் வெறுப்பதை நீ கூறுவதுதான் புறம்" என்றார்கள். "நான் கூறுவது என்னுடைய சகோதரனிடம் இருந்தால் அதுவும் புறமாகுமா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம் இருந்தால் நீ அவனைப் பற்றி புறம் பேசுகிறாய். நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம் இல்லையெனில் நீ அவனைப் பற்றி இட்டுக்கட்டுகிறாய் (அவதூறு கூறுகிறாய்)" என்றார்கள்

(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்)

## புறம்பேசுதல் இறைவன் தடுத்த பாவமாகும்

இறைவன் கூறுகிறான்:-

● **இறைநம்பிக்கையாளர்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும் (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள் அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை**

**நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன் மிக்க கிருபை செய்பவன். (அல்-குர்ஆன் 49:12)** அதாவது புறம் பேசுதலை இறந்துவிட்ட ஒரு சகோதரனின் மாமிசத்தைப் புசிக்கும் கொடுமைக்கு ஒப்பாக்குகிறான் படைத்த இறைவன்!

புறம் பேசுவதால் மரணததிற்குப்பிறகு கப்ரிலும்(சமாதியிலும்) மறுமையிலும் கிடைக்கும் தண்டனைகள்: -

## சமாதியில் கிடைக்கும் தண்டனைகள்: -

● 'நபி(ஸல்) அவர்கள் இரண்டு சமாதிகளைக் கடந்து சென்ற போது 'இவர்கள் இருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள். ஒரு பெரிய வி'யத்திற்காக (பாவத்திற்காக) இவர்கள் இருவரும் வேதனை செய்யப்படவில்லை. அவ்விருவரில் ஒருவர், தாம் சிறுநீர் கழிக்கும்போது மறைப்பதில்லை. மற்றொருவர், புறம்பேசித் திரிந்தார்' என்று கூறிவிட்டு, ஒரு பசுமையான பேரீச்ச மட்டையைக் கொண்டு வரச் சொல்லி அதை இரண்டாகப் பிளந்து ஒவ்வொரு சமாதியின் மீதும் ஒரு துண்டை வைத்தார்கள். அது பற்றி நபி(ஸல்) அவர்களிடம், 'இறைத்தூதர் அவர்களே! நீங்கள் ஏன் இவ்வாறு செய்தீர்கள்?' என கேட்கப்பட்ட போது 'அந்த இரண்டு மட்டைத் துண்டுகளும் காயாமல் இருக்கும் போதெல்லாம் அவர்கள் இருவரின் வேதனை குறைக்கப்படக் கூடும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என இப்னுஅப்பாஸ்(ரலி) அறிவித்தார். ஆதாரம் : புஹாரி

## மறுமையில் கிடைக்கும் தண்டனைகள்: -

1) புறம் பேசுபவன் சுவனம் நுழையமாட்டான்:

● "புறம் பேசுபவன் சுவனம் நுழைய மாட்டான்" என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் (நூல்-முஸ்லிம்)

2) தங்களைத் தாங்களே கீறிக் கொள்வார்கள் : -

● "மி∴ராஜின் (விண்ணேற்றத்தின்) போது நான் ஒரு கூட்டத்தைக் கடந்து சென்றேன். அக்கூட்டத்தினருக்கு இரும்பினாலான நகங்கள் இருந்தன. அவர்கள் அதன் மூலம் அவர்கள் தங்கள் முகங்களையும் நெஞ்சங்களையும் காயப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போது "ஜிப்ரீலே, அவர்கள் யார்" என்று கேட்டேன். "இவர்கள் மனிதர்களின் மாமிசத்தைச் சாப்பிட்டவர்கள் புறம் பேசியவர்கள்) மனிதர்களின் கண்ணியத்தில் கை வைத்தவர்கள்" என்று விளக்கமளித்தார்கள்." அறிவிப்பாளர் அனஸ் (ரலி) நூல்: அஹ்மது.

(மி∴ராஜ் - நபிகளாருக்கு தன் வாழ்நாளிலேயே விண்ணுலகக் காட்சிகளைக் காட்ட அழைத்துச் செல்லப்பட்ட பயணம்.)

## பாவபரிகாரம் எவ்வாறு?

இறைவனும் அவனது தூதரும் தடுத்த புறம் பேசுதல் என்ற தீயசெயலை நாம் ஒவ்வொருவரும் தவிர்ந்திருப்பது மிக மிக அவசியமாகும். கடந்த காலத்தில் இப்பாவத்தைச் செய்திருந்து அதன் விளைவுகளில் இருந்து மறுமையில் தப்பித்துக்கொள்ள யாரேனும் விரும்பினால் அவர் அதற்கான பரிகாரத்தைத் தேட வேண்டும். அதாவது ஒருவர் புறம் பேசுவதன்

தீமைகளை அறிந்து அதைத் தவிர்ந்தவர்களாக, யாரைப் பற்றிப் புறம் பேசினார்களோ அவரிடம் மன்னிப்புக் கோரவேண்டும். ஏனெனில் அவர்கள் மன்னிக்காதவரை இறைவன் அப்பாவத்தை மன்னிப்பதில்லை. பின்னர் மனந்திருந்தியவராக அழுது மன்றாடி இறைவனிடம் பாவமன்னிப்பு கோரவேண்டும்.

இறைவன் கூறுகிறான்:-

**● 'என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், இறைவனின் கருணையில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் நிச்சயமாக இறைவன் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்கக் கருணையுடையவன்' (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக. (அல்-குர்ஆன் 39:53)**

**● ஆகவே (மனிதர்களே!) உங்களுக்கு வேதனை வரும் முன்னரே நீங்கள், உங்கள் இறைவன்பால் திரும்பி, அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள் (வேதனை வந்து விட்டால்) பின்பு நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்". (அல்-குர்ஆன் 39:53-54)**

# மக்கள் சேவை என்ற இறைவழிபாடு

செல்வம் என்பது இறைவனுக்குச் சொந்தமானது. நம்மைப் பரீட்சிப்பதற்காக அது தற்காலிகமாக நம்மிடம் ஒப்படைக்கப் படுகிறது என்ற உண்மையை திருக்குர்ஆன் நமக்கு அடிக்கடி நினைவூட்டுகிறது. இறைவன் கற்பிக்கும் வழியில் செல்வம் செலவிடப்பட்டால் அது புண்ணியமாக கணக்கிடப்படும். அவ்வாறு செலவிடப்படாவிட்டால் அது பாவமாகும்.

**● மேலும், அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள். "உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம், அல்லாஹ்வின் முகத்திற்காக (அவன் திருப்பொருத்தத்திற்காக) உங்களிடமிருந்து பிரதிபலனையோ (அல்லது நீங்கள்) நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ நாங்கள் நாடவில்லை" (என்று அவர்கள் கூறுவர்). "எங்கள் இறைவனிடமிருந்து, (எங்கள்) முகங் கடுகடுத்துச் சுண்டிவிடும் நாளை நிச்சயமாக நாங்கள் பயப்படுகிறோம்" (என்றும் கூறுவர்). (திருக்குர்ஆன் 76:8,9,10)**

**● குற்றவாளிகளிடம் 'உங்களை நரகத்தில் சேர்த்தது எது?' என்று (நல்லோர்) விசாரிப்பார்கள். 'நாங்கள் தொழுவோராகவும், ஏழைக்கு உணவளிப்போராகவும் இருக்கவில்லை' எனக் (குற்றவாளிகள்) கூறுவார்கள். (திருக்குர்ஆன் 74:40 41, 42, 43, 44)**

**● அவர்களது செல்வங்களில் யாசிப்பவர்க்கும், இல்லாதவருக்கும் அறியப்பட்ட உரிமை இருக்கும்.**

**(திருக்குர்ஆன் 70:24)**

**● எனவே அனாதைகளை அடக்குமுறை செய்யாதீர்! யாசிப்பவரை விரட்டாதீர்! (திருக்குர்ஆன் 93:10)**

# இவற்றுக்கும் ரமலானுக்கும் என்ன தொடர்பு?

- சிலருக்கு லெக்கின்ஸ் என்பது ஆபாச உடை, வேறு சிலர் அதில் தவறே இல்லை என்கிறார்கள்.

- சிலருக்கு உயிரினங்களை கொன்று உண்பது பாவகரமான செயல், ஆனால் அவ்வாறு உண்பவர்களைப் பொறுத்தவரையில் அப்படி அல்ல.

- மதுவினால் சீரழிந்த குடும்பங்கள் மதுவிலக்கு கோரி போராட்டம் நடத்தும்போது மறுபுறம் அதற்கெதிராக மது அருந்துவது தனிமனித உரிமை என்று கூறி வேறொரு கூட்டம் மதுவிலக்குக்கு எதிராகப் போராடுகிறது..

- காதல் என்பதைப் புனிதமானது என்பார் சிலர். "உங்கள் மகளை அவளுக்கு விருப்பமானவரைக் காதலிக்க விடுவீர்களா? என்று அவர்களில் யாரிடமாவது கேட்டால் "அதெப்படி முடியும்?" என்பார்.

- நாங்கள் வெள்ளையர்கள், எங்கள் மொழியே உயர்ந்தது என்று வாதித்து கறுப்பினத்தவரை அடிமையாக்கினார்கள்.

- ஒரு சாரார் நாங்கள் கடவுளுக்கு நெருக்கமானவர்கள், நாங்களே உயர்ந்த குலம் என்று வாதித்து மற்றவர்களை தீண்டாத்தகாதவர்களாக நடத்தினார்கள்.

இவ்வாறு ஆளுக்கு ஆள், இனத்துக்கு இனம், நிறத்துக்கு நிறம், நாட்டுக்கு நாடு என மக்கள் வெவ்வேறு விடயங்களில் ஒருவருக்கொருவர் முரண்பட்ட நிலைப்பாடு கொள்வதை நாம் அறிவோம். ஒருவருக்குப் பாவமாகப் படுவது மற்றவருக்கு புண்ணியமானதாகப் படுகிறது. ஒருவருக்குப் புனிதமானதாகப் படுவது மற்றவைக்கு பாவமாகவோ அருவறுபபானதாகவோ படுகிறது. இதில் யார் மற்றவர் மீது ஆதிக்கம் பெறுகிறார்களோ அவர்கள் தம் கருத்துக்கு இணங்காதவர்கள் மீது தம் அடக்குமுறைகளை அவிழ்த்து விடுகிறார்கள். ஆனால் பலதரப்பட்ட மக்கள் இணைந்து நல்லிணக்கத்தோடு வாழவேண்டுமானால் அங்கு அனைவருக்கும் பொதுவான நியாயமான சட்டங்கள் இயற்றப்பட்டு அவை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

### நியாயமான சட்டங்கள்

நாட்டின் அமைதியின்மைக்கும் நீதியும் நியாயமும் கேலிக்குரியதாவதற்கும் முக்கிய காரணம் சரி எது, தவறு எது அல்லது நன்மைகள் எவை தீமைகள் எவை என்பதைப் பற்றி தெளிவான அறிவில்லாமல் மனிதன் தன் மனம்போன போக்கில் இயற்றும் சட்டங்களே! பலதரப்பட்ட மக்களும் பல்வேறு விதமான ஜீவராசிகளும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் இவ்வுலகில் அனைவருக்கும் உரிமைகள் உள்ளன. அவற்றை நீதமாகப் பங்கிடக் கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமானால் அதற்கு பரந்த விசாலமான அறிவும் மிக ஆழமான நுண்ணறிவும் பக்குவமான தூரநோக்கும் அத்தியாவசியமானதாகும். இப்பரந்து விரிந்த உலகில் நீர்க்குமிழி போன்று வாழ்ந்து மறையும் ஆறடி மனிதனுக்கு அந்த இயல்புகள் இல்லை

என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட அறிவும் ஆற்றலும் இவ்வுலகின் அதிபதியாகிய இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்பது தெளிவு!

அந்த இறைவன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான் அறிவுடைமை. அதுவே இவ்வுலகில் தனிநபர் நல்லொழுக்கத்திற்கும் சமூகத்தில் அமைதிக்கும் பல்வேறு சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும்.

மட்டுமல்ல, ஆன்மீக ரீதியாக இவ்வுலகம் என்ற இந்தப் பரீட்சைக் களத்தில் இறைவன் எதைச் செய் என்று சொல்கிறானோ அதுவே புண்ணியம் என்பது. அவன் எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் என்பது! எந்த மனிதனும் மனிதர்களின் குழுக்களும் நீதிமன்றங்களும் சட்டசபைகளும் பாராளுமன்றங்களும் இன்ன பிற ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களும் பாவ-புண்ணியங்கள் எவை என்பதைத் தீர்மானிக்க முடியாது. காரணம் இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதி இறைவன் மட்டுமே. அன்று அவனே நமது வாழ்க்கையில் நாம் செய்த புண்ணியங்களையும் பாவங்களையும் கணக்கிட்டு அதன் அடிப்படையில் நமக்கு சொர்க்கத்தையோ நரகத்தையோ விதிக்க இருக்கிறான்.

**இலட்சிய அளவுகோல்** (ideal criterion)

எனவே நமக்கு இம்மைக்கும் மறுமை வாழ்வுக்கும் நன்மை பயப்பது இறைவன் தரும் வாழ்வியல் சட்டங்களேயாகும். சரி எது தவறு எது நல்லது எது தீயது எது நியாயம் எது அநியாயம் எது என்பதைப் பிரித்தறிய இறைவன் எதை அளவுகோலாக தருகிறானோ அதுவே அதிபக்குவமானதும் பின்பற்றத் தக்கதும் ஆகும். இன்று இவ்வுலகில் வாழும் மக்களுக்காக இலட்சிய அளவுகோலை (ideal criterion) இறைவன் அவனது இறுதித் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு வழங்கினான். அதுவே திருக்குர்ஆன் என்ற இறை அற்புதம். அந்த திருக்குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதமே ரமலான் என்ற அரபு மாதம். அதை கொண்டாடும் விதமாகவே உலகெங்கும் முஸ்லிம்கள் இந்த மாதம் முழுவதும் விரதம் இருக்கிறார்கள்

● **ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது, ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்,**

● **இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாக(வும், அசிரத்தையாக)வும் இருப்போர். அவர்கள் பிறருக்குக் காண்பிக்(கவே தான் தொழு)கிறார்கள். மேலும், அற்பமான (புழங்கும்) பொருள்களைக் (கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள். (திருக்குர்ஆன் 107:4- 7)**

# உறங்க முடியா இரவுகளில் ஒன்று!

நபிகள் நாயகம் அவர்களின் மறைவுக்குப் பின் மதீனாவின் ஆட்சிப்பொறுப்பு அவரது உற்ற தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களிடமும் அவரைத் தொடர்ந்து உமர்(ரலி) அவர்களிடம் வந்தது. ஒவ்வொரு ஆட்சியாளரும் பொறுப்பாளரே. அவரது பிரஜைகள் குறித்து மறுமையில் இறைவனால் விசாரிக்கப் படுவார் என்ற நபிகள் நாயகத்தின் கூற்று உமரை உறங்கவிடாமல் தடுத்தது. நாட்டு மக்களின் நிலை அறிய இரவுகளில் நகர்வலம் வந்தார் மக்கள் தலைவர் உமர்.

மதினா நகரமே உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்த ஒரு நள்ளிரவு நேரம். எங்குமே பேரமைதி. வானிலே ஆங்காங்கே கண் சிமிட்டும் நட்சத்திரங்கள். இவ்வேளையில் ஜனாதிபதி உமர் (ரலி) அவர்கள் வீதியிலே இறங்கி நகர்வலம் வந்துகொண்டு இருந்தார்.



நகரின் எல்லையைக் கடந்து செல்கையில், தன்னந்தனியே இருந்த சின்னஞ்சிறு கூடாரம் ஒன்றில் சிறு விளக்கொளியைக் கண்டு அதனை நோக்கி நடந்தார். அருகில் சென்று பார்த்த போது, அங்கே ஒரு மனிதர் தலை குனிந்து அமர்ந்திருந்தார்.

அவரை நோக்கி உமர் (ரலி) இரண்டு முறை ஸலாம் கூறியும் அவர் பதில் ஏதும் கூறாததால், மூன்றாவது முறையும் ஸலாம் சொன்னார். அம்மனிதர் ஆவேசப்பட்டு, பக்கத்தில் கிடந்த வாளை எடுத்துக் கொண்டு, “நீ போக மாட்டாயா....? உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரனாகக் கூடத் தெரியவில்லையே...? வழிப்பறி கொள்ளையனாகவல்லவா தோன்றுகிறது...?’ எனக் கத்தினார்.

உமரோ அமைதியாக, “நண்பரே..! நீர் நினைப்பது போல் நான் பிச்சைக்காரனுமல்ல, வழிப்பறி கொள்ளையனுமல்ல. உம்மைப் பார்த்தால் வெளியூர்க்காரர் போல் தோன்றுகிறது. அதனால் தான் உம்மோடு பேச நினைத்தேன்’ என்று சொல்லிக் கொண்டிருக்கையில் கூடாரத்திலிருந்து பெண்ணின் கூக்குரல் கேட்டது. திடுக்கிட்ட உமர் (ரலி) அவர்கள், “அங்கே கூக்குரலிடுவது, யார்..?’ என வினவ, “அவள் என் மனைவி’ என அம்மனிதர் கூற, “அவர் ஏன் கூச்சலிட வேண்டும்..?” என்று உமர் கேட்டார்.

“பிழைப்பைத் தேடி, இந்நாட்டிற்கு வந்தோம். வந்த இடத்தில் பிரசவ வேதனை தொடங்கி விட்டது. என்ன செய்வதெனத் தெரியாமல் நான் இங்கு கவலையோடு உட்கார்ந்திருக்கிறேன்’ என்று பதிலளித்தார் அந்த மனிதர்.

“மருத்துவச்சியை அழைத்து வருகிறேன்’ என உமர் (ரலி) எழுந்ததும்,

“வேண்டாம், வேண்டாம்’ எனப் பதறினார் அம்மனிதர். “ஏன் மருத்துவச்சியை வேண்டாம் என்கிறீர்..?’ என உமர் வினவியதும், “மருத்துவச்சிக்குக் கொடுக்க என்னிடம் பணமில்லை’ என்றார் சோகமுடன்.

“நான் அழைத்து வரும் மருத்துவச்சி, பணம் வாங்க மாட்டாள். கவலைப்படாதீர்கள்’ என்று சொல்லிக் கொண்டே வேகமாக வெளி நடந்தார் உமர்.

வீட்டை அடைந்ததும் தன்னுடைய மனைவியை அழைத்து உடனே புறப்படுமாறு உத்தரவிட்டார். “நீங்கள் சாப்பிடவில்லையா..?’ என மனைவி கேட்க, “இல்லை. அந்தச் சாப்பாடு வேறொருவருக்குத் தேவை’ என்றார். “கொஞ்சம் பாலாவது அருந்துங்களேன்’ என்றதும், “வேண்டாம். பிரசவ வேதனையிலிருக்கும் அந்தப் பெண்மணிக்கு அது தேவைப்படலாம். உடனே அவற்றை எடுத்துக் கொண்டு புறப்படு. நான் ஒட்டகத்தை ஓட்டி வருகிறேன்’ என்று புறப்பட்டார் உமர்.

சிறிது நேரத்தில் உமரும், அவருடைய மனைவியும் கூடாரத்தை அணுகியதும், மனைவியை கூடாரத்திற்குள் அனுப்பி விட்டு உமர் அவர்களும், அம்மனிதரும் வெளியில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

“இந்நாட்டிற்கு உமர் தானே இப்போது தலைவர்...?’

“ஆமாம்.’

“அவர் மிகவும் கடினமானவர் என்கிறார்களே..!’

“அது அவரவர் கருத்தைப் பொறுத்தது.’

“நீர் உமரை பார்த்திருக்கிறீரா....?’

“பார்த்திருக்கிறேன்.’

“அவரிடம் நிறையப் பணம் இருக்குமே?’

“அவரிடம் ஏது பணம்...?’

“என்ன வேடிக்கை, ஒரு அரசாங்கத் தலைவர் பணம் சேர்த்து வைக்காமலா இருப்பார்...?’

“அப்படி பணம் சேர்க்கும் யாரையும் நாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுப்பதில்லை.’

இச்சமயத்தில் கூடாரத்திலிருந்து மருத்துவச்சியின் குரல் ஒலித்தது. “ஜனாதிபதி அவர்களே...! உங்கள் நண்பருக்கு வாழ்த்துக் கூறுங்கள். அவருக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.’

“ஜனாதிபதி’ என்ற சொல்லைக் கேட்டவுடன் அந்த மனிதர் உடல் நடுங்கி, உமரின் காலில் விழச் சென்றார். அம்மனிதரை அணைத்துக் கொண்டு, “நண்பரே...! ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்...? என்ன நடந்துவிட்டது..?’ என அன்போடு கேட்டார் ஜனாதிபதி உமர் அவர்கள்.

“அப்படியானால் மருத்துவம் பார்த்த அந்தப் பெண்மணி யார்..?’ என

அம்மனிதர் வினவ, "அவர் எனது மனைவி' என உமர் கூறவும், ஆச்சரியத்தால் திகைத்துப் போன அந்த மனிதர், நன்றி கலந்த குரலில் கேட்டார், "இந்த நாட்டின் தலைவரான தாங்களா இவ்வளவு ஊழியம் எனக்குச் செய்தீர்கள்...?'

"இதில் வியப்படைய என்ன இருக்கிறது நண்பரே...? ஒரு நாட்டின் தலைவன் என்பவன், அந்நாட்டு மக்களின் ஊழியன்தானே...! நாளை பள்ளிவாசலுக்கு வாருங்கள். உங்கள் வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்வோம்' எனக்கூறி புறப்பட்டார் உத்தமர் உமர் (ரலி) அவர்கள்.

(ரலி - ரலியல்லாஹு அன்ஹு என்பதன் சுருக்கம். அவர் மீது இறைவனின் திருப்பொருத்தம் உண்டாவதாக என்பது பொருள்)

# துறவறம் இறைவனுக்கு ஏற்புடையதல்ல!

நபித்தோழர் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ்(ரலி) அவர்களிடம் நபிகளார் இவ்வாறு கூருனார்கள்:

நபி(ஸல்) அவர்கள் என்னிடம், "அப்துல்லாஹ், நீர் பகலெல்லாம் நோன்பு நோற்று, இரவெல்லாம் நின்று வணங்குவதாக எனக்குக் கூறப்படுகிறதே!" என்று கேட்டார்கள். நான் "ஆம்! அல்லாஹ்வின் தூதரே!" என்றேன். நபி(ஸல்) அவர்கள், "இனி அவ்வாறு செய்யாதீர்! (சில நாட்கள்) நோன்பு வையும்: (சில நாட்கள்) விட்டுவிடும்! (சிறிது நேரம்) தொழும்: (சிறிது நேரம்) உறங்கும்! ஏனெனில், உம் உடலுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் உமக்கிருக்கின்றன. உம் கண்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உமக்கிருக்கின்றன. உம் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உமக்கிருக்கின்றன. உம் விருந்தினருக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உமக்கு இருக்கின்றன! ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நீர் நோன்பு நோற்பது உமக்குப் போதுமானதாகும்! ஏனெனில், (நீர் செய்யும்) ஒவ்வொரு நற்செயலுக்கும் பகரமாக உமக்கு அது போன்ற பத்து மடங்கு (நன்மை)கள் உண்டு! (இந்தக் கணக்குப்படி) இது காலமெல்லாம் நோன்பு நோற்றதாக அமையும்!" என்று கூறினார்கள்.

நான் சிரமத்தை வலிந்து ஏற்றுக்கொண்டேன். அதனால், என்மீது சிரமம் சுமத்தப்பட்டு விட்டது! "அல்லாஹ்வின் தூதரே! நான் வலுவுள்ளவனாக இருக்கிறேன்!" என்று நான் கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "நபி தாவூத் நபி அவர்கள் நோன்பு நோற்றவாறு நீர் நோன்பு நோற்பீராக! அதைவிட அதிகமாக்க வேண்டாம்!" என்றார்கள். "தாவூத் நபியின் நோன்பு எது?" என்று நான் கேட்டேன். "வருடத்தில் பாதி நாட்கள்!" என்றார்கள்.

"அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ்(ரலி) அவர்கள், "வயோதிகம் அடைந்த பின் நபி(ஸல்) அவர்களின் சலுகையை நான் ஏற்காமல் போய்விட்டேனே!" என்று (வருத்தத்துடன்) கூறுவார்கள்!" என அபூஸலமா(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். (நூல்: புஹாரி 1975)

# அவர்தான் அண்ணல் நபிகளார்!

## எளிமையே அவர் வழி

● நபி (ஸல்) அவர்கள் இரண்டு விஷயங்களில் ஒன்றை தேர்ந்தெடுக்க விருப்பம் கொடுக்கப்படும் போது, பாவமானதாக இல்லாதவரை அவ்விரண்டில் மிக இலகுவானதையே அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அது பாவமானதாக இருந்தால், அதை விட்டும் நபி(ஸல்) அவர்கள் தூரமாக ஒதுங்கி விடுவார்கள்.

அறிவிப்பு: அன்னை ஆயிஷா (ரலி) (புகாரி, முஸ்லிம்)

## தனக்காகப் பழிவாங்கவில்லை

● நபி (ஸல்) அவர்கள் எந்த விஷயத்திலும் தனக்காக எப்போதும் பழிவாங்கியதில்லை. எனினும், இறைவனின் கண்ணியம் சேதப்படும் போது, இறைவனுக்காக அவர்கள் பழிவாங்காமல் இருந்ததில்லை

அறிவிப்பு: அன்னை ஆயிஷா (ரலி) (புகாரி, முஸ்லிம்)

## உயர்ந்தவை தாழ்த்தப்படும்!

● நபி (ஸல்) அவர்களிடம் "அழ்பாஉ" என்ற ஒட்டகை இருந்தது. அதை எந்த ஒட்டகையாலும் முந்த முடியாது அல்லது முந்த முயற்சித்தது கூட கிடையாது.

ஒரு காட்டரபி தன் பெண் ஒட்டகை மீது ஏறி வந்து, அதை முந்திவிட்டார். இது முஸ்லிம்களுக்கு துயரத்தை ஏற்படுத்தி விட்டது.

இதைக் கேள்விப்பட்ட நபி (ஸல்) அவர்கள் "உலகில் எந்தப் பொருள் உயர்ந்தாலும், அதை (ஒரு நேரத்தில்)தாழ்த்துவது என்ற கடமை இறைவன் மீது உள்ளது" என்று கூறினார்கள்.

அறிவிப்பு: அனஸ் (ரலி) (புகாரி)

## உண்ணும் ஒழுக்கம்

● "நபி (ஸல்) அவர்கள் உணவு சாப்பிட்டால், மூன்று தடவை தன் கை விரல்களை சூப்புவார்கள்.

● உங்களின் உணவில் ஒரு சிறு பகுதி கீழே விழுந்து விட்டால்கூட, அதில் உள்ள அசுத்தத்தை நீக்கி, அதை சாப்பிடட்டும், ஷைத்தானுக்கு அதை விட்டு விட வேண்டாம்" என்று நபி (ஸல்) கூறினார்கள்.

● மேலும் உணவுத்தட்டு வழித்து உண்ணப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். உங்கள் உணவில் எதில் "பரக்கத்" (அருள்வளம்) உள்ளது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள் என்றும் கூறினார்கள்.

அறிவிப்பு: அனஸ் (ரலி) (முஸ்லிம்)

## பெருமை பாராட்டவில்லை

● "ஓர் ஆட்டின் காலின் கீழ் பகுதி, அல்லது தொடைப்பகுதி ஆகியவற்றை சமைத்து விருந்துக்கு என்னை அழைக்கப்பட்டாலும் நான் அதை ஏற்பேன். எனக்கு ஆட்டின் காலின் கீழ் பகுதியையோ, அல்லது தொடைப் பகுதியையோ அன்பளிப்பாக கொடுக்கப்பட்டாலும் அதை ஏற்றுக்கொள்வேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி): (புகாரி)

**குடும்பத்தாருக்கு உதவி**

● "நபி (ஸல்) அவர்கள் தங்களின் வீட்டில் எப்படி நடந்து கொள்வார்கள்? என, ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. தன் குடும்பத்தாருக்கு உதவி புரிவதில் நபி(ஸல்) அவர்கள் இருப்பார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால் தொழுகைக்கு புறப்பட்டுச் செல்வார்கள் என்று ஆயிஷா(ரலி) பதில் கூறினார்கள்.

அறிவிப்பு : அஸ்வத் இப்னு யஸீத் (ரலி) (புகாரி)

**பதவி என்பது அதை விரும்பாதோருக்கே!**

● "நானும், என் சிறிய தந்தையின் இரண்டு மகன்களும் நபி (ஸல்) அவர்களிடம் வந்தோம். அவ்விருவரில் ஒருவர், "இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் உங்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ள பகுதியில் எங்களை (அதிகாரியாக) நியமியுங்கள்" என்று கேட்டார். இன்னொருவரும் இதே போல் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "நிச்சயமாக நாம், அல்லாஹ்வின் மீது சத்தியமாக, இப்பதவியை கேட்கின்ற எவருக்கும், இதை ஆசை கொள்கின்ற எவருக்கும் இந்த அதிகாரத்தை வழங்கிட மாட்டோம்" என்று கூறினார்கள்.

அறிவிப்பு : அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி) (புகாரி, முஸ்லிம்)

**கோபம் கொள்ளாதே**

● "ஒரு மனிதர், நபி (ஸல்) அவர்களிடம் "எனக்கு உபதேசம் செய்யுங்கள்" என்று கூறினார். "நீர் கோபப்படாதீர்!" என்று கூறினார்கள். அவர் மீண்டும் மீண்டும் கேட்டார். "நீர் கோபப்படாதீர்!" என்று பலமுறை நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பு : அபூஹுரைரா (ரலி) (புகாரி)

# பொறுப்புணர்வு மார்க்கக் கடமை

● ஒரு மனிதர் நபியவர்களிடம் "மனைவிக்குக் கணவன் செய்ய வேண்டிய கடமைகள் என்ன?" என்று கேட்டார் அதற்கு நபி(ஸல்) அவர்கள், "நீ உண்ணும் போது அவளுக்கு உணவளிப்பதும், நீ அணியும் போது அவளுக்கு அணிவிப்பதும், (கண்டிக்கும் போது) முகத்தில் அடிக்காதிருப்பதும், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பதும், வீட்டில் தவிர மற்ற இடங்களில் வெறுக்காமல் இருப்பதும் ஆகும்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: முஆவியா பின் ஹைதர்(ரலி)

*நூல்கள்: அபூதாவூத் 1830 அஹ்மத் 19162*

● தன் பொறுப்பில் உள்ளவர்களை (கவனிக்காமல்) வீணாக்குவது அவன் பாவி என்பதற்குப் போதுமானதாகும்" என்று நபியவர்கள் சொன்னார்கள்.

*அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலீ) நூல்: அபூதாவூத் 1442*

**● (நபியே!) நியாயத் தீர்ப்பைப் பொய்ப்பிக்கின்றானே அவனை நீர் பார்த்தீரா? பின்னர் அவன்தான் அநாதைகளை விரட்டுகிறான். மேலும், ஏழைக்கு உணவளிப்பதின் பேரிலும் அவன் தூண்டுவதில்லை. (திருக்குர்ஆன் 107:1- 3)**

# உழைப்பதின் சிறப்பும் உழைப்போர் குணமும்

வெறும் இறைவனுக்கு செய்ய வேண்டிய வணக்கங்களை மட்டும் இஸ்லாமிய மார்க்கம் போதிக்காமல், ஒரு நிம்மதியான குடும்ப வாழ்க்கைக்கு தேவையான அனைத்து உபதேசங்களையும் வழங்கியுள்ளது. நிம்மதியான குடும்ப வாழ்விற்கு பொருளாதாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதாரத்தை ஈட்டுவதற்கு உழைப்பதை இஸ்லாமிய மார்க்கம் வலியுறுத்துகிறது.

## உழைப்பின் சிறப்பைப் பற்றி இறைவன்

● **“தொழுகை முடிக்கப்பட்டதும் பூமியில் அலைந்து அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள்! அல்லாஹ்வை அதிகம் நினையுங்கள்! நீங்கள் வெற்றி பெறுவீர்கள்“ (அல்குர்ஆன் 62:10)**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்)*

## இறைவனை மறக்காதிருத்தல்

அவர்கள் அவனை எப்போதும் நினைவு கூறுபவர்களாக மட்டுமின்றி, பொருளாதாரத்தை ஈட்ட வியபாரத்தையும் செய்து கொண்டு, இறைவனின் கடமைகளையும் ஒரு சேர செய்வார்கள் எனக் கூறுகிறான்.

● **“வணிகமோ, வர்த்தகமோ அவர்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகையை நிலை நாட்டுவதை விட்டும், ஸகாத் கொடுப்பதை விட்டும் திசை திருப்பாது. பார்வைகளும் உள்ளங்களும் தடுமாறும் நாளை அவர்கள் அஞ்சுவார்கள்“ (அல்குர்ஆன் 24:37)**

## உழைத்ததை செலவிடுதல்

● **“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்ததில் தூய்மையானவற்றையும், பூமியிலிருந்து உங்களுக்கு நாம் வெளிப்படுத்தியதிலிருந்தும் (நல் வழியில்) செலவிடுங்கள்! கண்ணை மூடிக் கொண்டே தவிர எதை வாங்கிக் கொள்ள மாட்டீர்களோ அத்தகைய மட்டமான பொருளைச் செலவிட நினைக்காதீர்கள்! அல்லாஹ் தேவையற்றவன், புகழுக்குரியவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்!“ (அல்குர்ஆன் 2:267)**

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“அல்லாஹ் பரிசுத்தமானவற்றைத் தவிர வேறெதையும் ஏற்றுக்கொள்வதில்லை. யார் முறையான சம்பாத்தியத்தில் ஒரு பேரீச்சம் பழத்தின் மதிப்புக்குத் தர்மம் செய்தாரோ, அதை நிச்சயமாக அல்லாஹ் தனது வலக்கரத்தால் ஏற்றுக்கொண்டு பிறகு நீங்கள் உங்களின் குதிரைக் குட்டியை வளர்ப்பது போன்று அதன் நன்மையை மலைபோல் உயரும் அளவுக்கு வளர்த்துவிடுவான்“ *அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: புஹாரி 1410*

## இறைத்தூதர்களும் உழைத்தே உண்டார்கள்

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது...

ஸ்ரீ “அல்லாஹ் அனுப்பிய எந்த நபியும் ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித் தோழர்கள், “நீங்களுமா?“ என்று கேட்டார்கள். “ஆம். மக்காவாசிகளின்

சில கீராத் கூலிக்காக ஆடு மேய்ப்பவனாக நான் இருந்தேன்!“ என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (நூல்: புஹாரி 2262)

**யாசிப்பதை விட உழைப்பதே மேல்**

தம்முடைய தேவைகளுக்காக பிறரிடம் கையேந்துவதைவிட உழைத்து உண்பதை சிறப்பித்து காட்டுகிறது இஸ்லாம்.

● அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்... “பிறரிடம் யாசகம் கேட்பதைவிட ஒருவர் தமது முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து (விற்கச்) செல்வது சிறந்ததாகும். அவர் யாசிக்கும்போது யாரும் கொடுக்கவும் செய்யலாம்: மறுக்கவும் செய்யலாம்.“

இதை அபூஹுரைரா(ரலி) மற்றும் ஸுபைர் பின் அவ்வாம்(ரலி) ஆகியோர் அறிவிக்கின்றனர்.

(நூல்: புஹாரி 2075)

● “உங்களில் ஒருவர் ஒரு கயிற்றை எடுத்துக்கொண்டு தமது முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதைவிடச் சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவருக்கு இழிவு ஏற்படாமல் தடுத்துவிடுவான். மக்கள் அவருக்குக் கொடுக்கவும் செய்யலாம் அல்லது மறுக்கவும் செய்யலாம்“ அறிவிப்பவர்: ஸுபைர் பின் அல்அவ்வாம்(ரலி) நூல்: புஹாரி 1472

●’ஒருவர் தமது கையால் உழைத்து உண்பதைவிடச் சிறந்த உணவை ஒருபோதும் உண்ண முடியாது. தாவூத் நபி அவர்கள் தமது கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தார்கள்“

அறிவிப்பவர்: மிக்தாம்(ரலி) நூல்: புஹாரி 2072

# சகமனிதனின் மானம் பெரிது!

**● (சொத்தைப்) பங்கிடும் போது உறவினர்களோ, அனாதைகளோ, ஏழைகளோ வந்து விட்டால் அதில் அவர்களுக்கும் வழங்குங்கள்! அவர்களுக்கு நல்ல சொல்லையே கூறுங்கள்! (திருக்குர்ஆன் 4:8)**

**● உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவரவரின் உரிமையை வழங்குவீராக! ஒரேயடியாக வீண் விரையம் செய்து விடாதீர்! (திருக்குர்ஆன் 17:26)**

**● இறைவிசுவாசிகளே! ஒரு சமூகத்தார் பிறியதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம் (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம் இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள் இறைவிசுவாசம் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும் எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள். (அல்-குர்ஆன் 49:11)**

# மனிதனை நினைக்க கடவுளை மறக்கவேண்டுமா?

'நாத்திக நண்பர்கள் ஆத்திகர்களைப் பார்த்து அடிக்கடி சொல்லும் வாசகம் ஒன்று உண்டு... "கடவுளை மற, மனிதனை நினை!" என்பதுதான் அது.

அன்றாடம் உண்பதற்கு உணவில்லாமல் கோடிக்கணக்கான மக்கள் வாடும்போது கோவில் உண்டியலில் கோடிக்கணக்கான ரூபாய்கள் போடப்படுகின்றன. சிலைகளுக்கு பாலாபிே'கமும் நெய்- அபிே'கமும் நடக்கின்றன. திருமணத்திற்கு சிறு நகைக்குக் கூட வழியிலாத கோடிக் கணக்கில் ஏழைப் பெண்கள் தவிக்கும்போது சிலைகளும், கலசங்களும், தேர்களும் தங்கத்தால் செய்யப்படுகின்றன. சுற்றுமுள்ள ஏழைகளை சற்றும் கவனிக்காமல் செல்வந்தர்கள் இதற்காக வாரி வழங்குகின்றனர். இப்படிப்பட்ட கடவுளால் என்ன பயன்? என்பது அவர்களின் வாதம்.

தேவையுள்ள மனிதர்களுக்குச் செலவிடாமல் எந்தத் தேவையுமற்ற கடவுள்களுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் செலவிடப்படும் மனித நேயமற்ற காரியங்களைப் பார்க்கும் சிந்தனையாளர்கள் 'மதங்கள் அர்த்தமற்றவை' என்று கருதுகின்றனர்.

**இஸ்லாத்தின் நிலைப்பாடு**

உண்மையில் இஸ்லாம் என்பது ஒரு மதமும் அல்ல. பலர் கருதுவது போல சில சடங்குகளின் தொகுப்பும் அல்ல. மாறாக அது ஒரு முழுமையான வாழ்வியல் நெறி. மனிதவாழ்வின் அனைத்து துறைகளையும் தழுவி நிற்கிறது. மேற்கூறப்பட்டவாறு கடவுளின் பெயரால் பொருளாதாரத்தை வீணடிக்கும் காரியங்களை அறவே இஸ்லாம் மறுக்கிறது. ஆனால் மனிதனுக்கு சேவை செய்ய கடவுளை மறக்கவேண்டும் என்ற வாதத்தை அறவே மறுக்கிறது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் அனைத்து வழிபாடுகளும் மனித நலனையே மையம் கொண்டுள்ளன. ஐவேளைத் தொழுகைகள் ஒருபுறம் தனிமனித நல்லொழுக்கத்திற்கு வித்திடுகின்றன. மறுபுறம் இத்தொழுகைகளைக் கூட்டாக வரிசைகளில் அணிவகுத்து பள்ளிவாசல்களில் தொழும்போது அங்கு மனித சமத்துவமும் சகோதரத்துவமும் பேணப்படுகின்றன. சக மனிதனின் பசியை செல்வந்தர்களுக்கு உணர்த்துகிறது ரமலான் மாதங்களில் கடைப்பிடிக்கப்படும் நோன்பு என்ற வழிபாடு. ஜகாத் என்ற கட்டாய தர்மம் ஏழைகளின் துயர்துடைக்கும் புரட்சியை நடத்துகின்றது. சுயநலத்தால் மனிதன் சகமனிதனை மறந்து போகின்ற உலகில் சகமனித நலனுக்காக செய்யப்படும் அனைத்து சேவைகளையும் வழிபாடுகள் என்று கற்பிக்கிறது இஸ்லாம். மட்டுமல்ல மனிதர்கள் செய்யும் பாவங்களுக்கு பரிகாரமாக வழிபாட்டுத்தலங்களுக்கு காணிக்கை செலுத்தச் சொல்லவில்லை இஸ்லாம். மாறாக அப்படிப்பட்ட காணிக்கைகளையும் நேர்த்திக்கடன்களையும் ஏழைகளுக்காக செலவிடக் கற்பிக்கிறது அது.

**உதட்டளவு மனித நேயம் அல்ல!**

நாத்திகர்களும் நாத்திக இயக்கங்களும் உதட்டளவில் ‘மனிதனை நினை’ வாசகத்தை மொழியும்போது இஸ்லாம் மனிதனை நினைத்தால் மட்டும் போதாது, அவனை தன் சகோதரனாக, சமமானவனாக பாவிக்க வேண்டும் என்றும் இஸ்லாத்தைப் பின்பற்றுவோருக்குக் கட்டளையிடுகிறது. அவனது உரிமைகளைப் பேணவேண்டும் என்றும் அவற்றை மீறுதல் தண்டனைக்குரிய குற்றம் என்றும் எச்சரிக்கிறது.

திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான் :

- **மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும்(அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அதாவது அனைத்து மனிதகுலமும் ஆதித் தந்தை மற்றும் ஆதித் தாயின் சந்ததிகளே, நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்பதையும் நம் அனைவருக்கும் ஒரே இறைவனே என்பதையும் அடிப்படையாக வலியுறுத்தி உலகளாவிய சகோதரத்தையும் சமத்துவத்தையும் நிறுவுகிறது திருக்குர்ஆன். தொடர்ந்து நாம் அனைவரும் அந்த இறைவனின் பரிபாலனத்திலும் கண்காணிப்பிலும் உள்ளோம் என்பதை உணர்த்தி நம் செயல்களுக்காக இறைவனால் மறுமை வாழ்வில் விசாரிக்கப்பட உள்ளோம் என்றும் எச்சரிக்கின்றது இந்த இறைவசனம். அதாவது இறைகட்டளைகளைப் பேணி வாழ்வோருக்கு சொர்க்கமும் பேணாதவர்களுக்கு நரகமும் வாய்க்க உள்ளன என்ற உண்மையையும் உள்ளடக்கி நிற்கிறது இவ்வசனம்.

சமூக சீர்திருத்தங்கள்

எங்கெல்லாம் இஸ்லாம் என்ற இந்த வாழ்வியல் கொள்கை திருக்குர்ஆனும் அவரது போதனைகளும் எங்கெல்லாம் சென்றடைகிறதோ அந்த இடங்களிலெல்லாம்

- மனித உரிமை மீட்பு,
- இனவெறி ஒழிப்பு,
- ஜாதி ஒழிப்பு,
- நிறவெறி ஒழிப்பு,
- மனித சமத்துவம் நிலைநாட்டல்,
- மனித சகோதரத்துவம் நிலைநாட்டல்,
- பெண்ணுரிமைகள் மீட்பு,
- பெண்சிசுக்கொலை ஒழிப்பு,
- வரதட்சணை ஒழிப்பு,
- பாலியல் கொடுமைகளில் இருந்து பாதுகாப்பு
- விபச்சார ஒழிப்பு

- குடும்ப அமைப்பின் பாதுகாப்பு,
- குழந்தை வளர்ப்பில் ஒழுக்கம்
- தனிநபர் நல்லொழுக்கம்,
- மது, போதை தொல்லைகளில் இருந்து பாதுகாப்பு
- வட்டி ஒழிப்பு
- வறுமை ஒழிப்பு,
- வழிபாட்டு உரிமை மீட்பு
- இடைத்தரகர் ஒழிப்பு
- மூடநம்பிக்கை ஒழிப்பு
- ஆன்மீகத்தின் பெயரால் ஆதிக்கம் ஒழிப்பு,
- ஆன்மீகத்தின் பெயரால் சுரண்டல் ஒழிப்பு,

போன்ற பற்பல சமூகப் புரட்சிகளை உண்டாக்காமல் இருப்பதில்லை. மனித மனங்களை சீர்திருத்தி அவர்களின் கரங்களைக் கொண்டே நடத்தப்பட்டு வரும் புரட்சிகள் இவை. மற்ற சித்தாந்தங்களைப் போல் மக்களின் மீது ஆதிக்கம் பெற்று அரசாட்சியைக் கைப்பற்றி நடத்தப்படும் சமூக மாற்றங்களல்ல இவை.

நாத்திகர்கள் கூறுவதுபோல கடவுளை மறந்தால் மேற்கண்ட சமூகப் புரட்சிக்கள் உலகில் நடக்க வாய்ப்பே இல்லை என்பது தெளிவு.


அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன்

ஏக இறைவனின் பெயரால்....

# மனித குலத்தை ஒருங்கிணைக்கும் இஸ்லாம்

## பெருநாள் சகோதரத்துவ சந்திப்பு

நாள் : 18.07.2017 இறைவன் நாடினால் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை – செவ்வாய் கிழமை

இடம் : கோல்டன் மஹால், சிங்காரத்தோப்பு, திருச்சி – 8.

**நிகழ்ச்சி நிரல்**

● இஸ்லாத்தைத் தன் வாழ்வின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்ட முன்னாள் திரைப்பட நடிகர், நடிகையர் என்னை கவர்ந்த இஸ்லாம் என்ற தலைப்பில் உரை ● இஸ்லாம் குறித்த கேள்விகளுக்கு பதில் அளிக்கப்ப்டும். ● தொடர்ந்து விருந்து உபசரிப்பு நடைபெறும்.

**அனைத்து மத சகோதர சகோதரிகள் குடும்பத்துடன் வருக ! வருக !**

இறையருளைப் பெறுக !

**சமூக சகோதரத்துவ இஸ்லாமிய பேரவை அறக்கட்டளை, திருச்சி.**

**தொடர்புக்கு: 94426 09087**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60- ● ஈராண்டு சந்தா Rs.120-

● இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775 / 09886001357**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya

Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018(நுங்கம்பாக்கம்), 9840527687(பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994453346 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எஃப்:9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# பிரியா விடைபெறும் ரமலான்!

இல்லங்களில் பெரியோர்களைப் பார்த்து ஐந்து வயதுக் குழந்தைகளும் கூட நோன்பு வைக்க ஆசைப்படுவதும், பெற்றோர்களின் தடையையும் மீறி அவை உணவைத் தவிர்ப்பதும், ஆசையாக அவர்கள் உண்ணும் பொருட்களை கையில் பிடித்தபடியே நோன்பு துறக்கும் வேளை வரைப் பொறுமை காத்து பிறகு உண்பதும் இல்லங்களில் நாம் ரமளானில் மட்டுமே காணும் காட்சிகள்!

'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்!' என்பது பழமொழி. பசியின் முற்றிய நிலையில் மனிதனின் மனோநிலை எப்படி இருக்கும் என்பதையே இப்பழமொழி நமக்கு எடுத்துக் கூறுகிறது. ஒரு பத்து பேரை மதிய உணவுக்காக விருந்துக்கு அழைத்து இரண்டு மணிநேரம் காத்திருக்க வைத்துப் பாருங்கள்... பசியின் கொடுமையான விளைவுகளை அறிந்து கொள்ள முடியும்!

குழந்தைகள் முதல் பெரியோர் வரை உலக மக்கள்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்களை எவ்வளவு சுயக்கட்டுப்பாடு மிக்கவர்களாக ரமலான் வார்த்தேடுக்கிறது பாருங்கள். அவர்களைப் பகல் முழுக்க பட்டினி போட்டு அதே வேளையில் அவர்களுக்குக் கையெட்டும் துரத்தில் உணவுக் குவியலையும் வைத்துவிட்டு மாலைவரை பொறுமை காத்து வருமாறு கட்டளையிட்டு அதே வேளையில் இயல்பு வாழ்க்கை வாழவைக்கும் இறைவனின் இந்த பயிற்சிக்கு இணையான ஒன்றை நாம் வேறெங்கும் காண முடியுமா?

உலகெங்கும் பரவிக்கிடக்கும் தன் அடியார்கள் அனைவருக்கும் பகலில் பசி என்ற சீருடை அணிவித்து மாலையில் அவர்கள் சகோதர பாசத்தோடு பசியாறும் அழகைக் கண்டு ரசிப்பதில் இறைவனுக்கு அலாதி இன்பமோ?

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன: ஒன்று அவன் நோன்பு திறக்கும் நேரத்தில் ஏற்படக்கூடியது, மற்றது (நாளை மறுமையில்) அவனது இறைவனை சந்திக்கும் பொழுது ஏற்படக்கூடியது' (புஹாரி, முஸ்லிம்).

